# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 05 | ஞாயிற்றுக்கிழமை | 21.07.2024 | கதிர் 256


## கட்டுப்பாட்டு விலை வரும் ஆளும் தரப்பு எச்சரிக்கை

ஆளும் தரப்பு வழங்கும் சலுகைகளை நுகர்வோருக்கு வழங்குவதற்கு வர்த்தகர்கள் செயற்படாவிட்டால் குறிப்பிட்ட சில பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நேரிடும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில ஆண்டுகளாக நிலவி வந்த நெருக்கடி காலத்தை தற்போது முடிவுக்குக் கொண்டு வர முடிந்துள்ளது. அதற்குதற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கினார். இந்த வெற்றியை அடைவதற்கு ஆளும் தரப்பு என்ற ரீதியில் நாம் பல திட்டங்களை நடைமுறைப்படுத் தினோம். அதன் வெற்றிகரமான பயனைமக்கள்தற்போது அனுபவித்து ☞ 2

## இதுவரையில் என்னதான் செய்தோம்? பல தரப்பட்டவர்களுடன் பேசினோம்

### விக்னேஸ்வரன் எம்.பி. தெளிவுபடுத்தல்

தமிழ் மக்கள் கூட்டணி இதுவரையில் என்ன செய்தது என்று கேட்டால், பல நாடுகளின் உயர்ஆணையர்கள், தூதுவர்கள் எனப் பல தரப்பினருடன் எமது பிரச்சினைகள் தொடர்பில் பேசி இருக்கிறோம். எமது கருத்துக்களை அவர்கள் உன்னிப்பாகச்செவிமடுத்துச் சிலதைச் செய்துள்ளார்கள்.

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன்தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமையாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் மாலை 3 மணிக்குநடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியத்தில் எம்முடன் இணைந்து செயற்பட கூடியவரான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். அவருடன் சிறப்பு விருந்தினராக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி கணேசலிங்கமும் கலந்துகொள் ளவுள்ளார். எமது மாநாட்டிற்கு அனைத்துத்தரப்பினரையும்வருமாறு அழைப்பு விடுத்துள்ளோம்.

எங்களுடைய கட்சி இதுவரை பல கஷ்டங்களை எதிர் கொண்டு, ☞ 2

## இது இனி ரகசியம் அல்ல!

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் நேற்று அவரது வீட்டில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பல அரசியல் விடங்களைப் பற்றிப் பேசினாலும், தனது மாணவனான சுமந்திரனைப் போட்டுத் தாக்கவும் அவர் தவறவில்லை.

அதாவது தன்னுடைய கட்சியின் தேசிய மாநாட்டுக்கு சிறீதரனை அழைத்திருப்பது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது சுமந்திரனையும் வம்புக்கு இழுத்தார் அவர்.

தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனை உங்கள் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு அழைத்திருக்கிறீர்களே, அப்படியானால் எதிர்காலத்தில் அவருடன் சேர்ந்து பயணிப்பதற்கு சாத்தியங்கள் இருக்கிறதா எனச் செய்தியாளர் ஒருவரு கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கும் போதே அழையா விருந்தாளியாக சுமந்திரனை இழுத்தார் நீதியரசர். வில்லன் இல்லையென்றால் ஹீரோவுக்கு என்ன மதிப்பு? அதனால் சுமந்திரனை வலிந்து இழுத்து இந்தக் கேள்விக்குப் பதில் சொன்னார்.

"தமிழ் தேசிய கட்சிகள் ☞ 2

# செப்டெம்பர் 28இல் ஜனாதிபதித் தேர்தல்

### அடுத்த வாரம் அறிவிப்பு வரும்

**செப்டம்பர் 28 சனிக்கிழமை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாக மிகவும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

**ஜனாதிபதி தேர்தல் தொடர்பான இந்த உத்தியோகபூர்வ முடிவை தேர்தல்கள் ஆணைக்குழு அடுத்த வாரத்தில் வெளியிடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**அரசமைப்புச் சட்டத்தின்படி செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையான காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப் படவேண்டும்.** ☞ 2

## அலி சப்ரி ரஹீம் எம்.பி. பிணையில் விடுவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் 2 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அலி சப்ரி ரஹீம் நேற்று முற்பகல் கைதுசெய்யப்பட்டார். புத்தளம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரது தரப்பு விளக்கத்தைக் கேட்ட பின்னர் நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியது. அத்துடன், கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தில் ஜூலை 22 முன்னிலையாகுமாறும் அவருக்கு உத்தரவிடப்பட்டது.

மத்ரஸா பாடசாலையொன்றுக்குள் அத்துமீறி பிரவேசித்தமை தொடர்பான வழக்கொன்றில் பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணைக்கு அமையவே அவர் கைதுசெய்யப்பட்டார். கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த அவரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

## உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியிருந்தால் நாடு மோசமான அவலத்தை சந்தித்திருக்கும்

### விளக்கம் சொல்கிறார் ஜனாதிபதி

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை விட்டுவிட்டு, அன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பணத்தை செலவிட்டிருந்தால், இன்று நாடு மிக மோசமான அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் என ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் நேற்று நடைபெற்றஉள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் நாட்டை பொறுப்பேற்றபோது நாடு பல நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது. பொருளாதார வீழ்ச்சி மட்டுமன்றி, சட்டமும் அரசியலும் வீழ்ச்சி கண்டன. ஆனால் இந்த தேர்தலில் கட்சிகள் தோல்விஅடைந்துள்ளன.

பிரதமர் பதவியை ஏற்குமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது, அச்சமின்றி ஏற்றுக்கொண்டேன். ஆனால் அதற்கு முன்னதாகவே எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிற கட்சித்தலைவர்களுக்கு அந்தக் கோரிக்கை விடுக்கப் பட்டது.

அப்போது அவர்கள் யாரும் சவாலை ஏற்க முன்வரவில்லை. ஆனால் நான் சவாலை ஏற்றுக்கொண்டதன் பின்னர், நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்தேன்.

அதன் பிரகாரம், முதலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தவிசாளருடன் கலந்துரையாடுவதற்குத் தயாரானோம். ஆனால் அக்கட்சியின் தவிசாளர் அதனை ஏற்கவில்லை. அதன் பின்னர் மஹிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடப்பட்டது. அப்போது அவர் கட்சியினருடன் கலந்து பேசி முடிவை அறியத் தருவதாகச் சொன்னார். அதன்படி, பொது ஜன பெரமுன எனக்கு ஆதரவளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அறிவித்தார்.

அன்றைய தினம் நான் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவைப்பெற முயற்சித்தேன். ☞ 8

## 22ஆவது திருத்தத்தினால் தேர்தலுக்கு பாதிப்பில்லை

### இப்படிச் சொல்கிறார் எஸ்.பி.திஸநாயக்க

அரசமைப்பின் 22ஆவது சட்டத் திருத்தத்தால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எந்தப் பாதிப்பும் வராது என்று பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ☞ 2

### அரசமைப்பின் 83ஆம் பிரிவு திருத்தப்படாத

## ஜனாதிபதி பதவிக் கால குழப்பத்திற்கு மைத்திரிபால சிறிசேனவே காரணம்

### ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவிப்பு

ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து எழுந்துள்ள குழப்பத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே முதன்மைக் காரணம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன் மீது குற்றச்சாட்டுகளை சுமத்துவது கவலை அளிப்பதாக உள்ளது என்றும் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 83ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதியினதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக்காலத்தின் ☞ 2

## 22ஆவது திருத்தம் சந்தேகம் தருகிறது

### சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

அரசமைப்பின் 22ஆவது திருத்தம் இப்போது அவசரமாகக் கொண்டு வரப்படுவது சந்தேகத்தை தருகின்றது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பா ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலை எல்லோருமாக ஒரு வருட காலம் பிற்போடவேண்டும்

### தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் வலியுறுத்து

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது முழு நாட்டிற்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கு நன்மையே. அதனால் எல்லோருமாகச் சேர்ந்து ஜனாதிபதித் தேர்தலை ஒரு வருட காலத்திற்குப் பிற்போடவேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ☞ 2

## இனி இது .....

என்ற முறையிலும் தமிழ்த் தேசிய உணத்வுகளை கொண்டவர்கள் என்ற முறையிலும் எங்களுக்கும் சிறிதரனுக்கும்இடையில்நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. இந்த விதத்திலே என்னுடைய அருமை மாணவன் (சுமந்திரன்) பல விதமான தகைமைகளைக்கொண்டிருந்தாலும் தமிழ்த் தேசிய உணர்ச்சி அவருக்கு இல்லை. அவர் எல்லாவற்றையும் மூளையினால் பார்ப்பாரே ஒழிய உணர்வினாலோ உணர்ச்சியினாலோ பார்க்கக் கூடியவர் அல்லர்.

அந்த விதத்தில் தமிழ் அரசுக் கட்சியினுடைய தலைவராக சிறிதரன் வருவதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதனையே வரவேற்கின்றோம். அத்தோடு இதுரை காலமும் தமிழ்த் தேசியத்திற்கு குரல் கொடுத்து வருகின்ற ஒருவர் என்ற முறையிலே அவரை நாங்கள் அழைத்திருக்கின்றோம். அதேபோன்று தான் பேராசிரியர் கணேசலிங்கத்தையும்அழைத்திருக்கிறோம்.

ஆகவே தமிழ் தேசியத்தின் அடிப்படையிலேநாங்கள்முற்செல்ல வேண்டும் என்பதால் அதில் எந்தவிதமான மாற்றுக்கருத்திற்கும் இடமில்லை" என்பதுதான் அவரது பதிலாக இருந்தது.

அவரது கருத்துப்படி பார்த்தால் தமிழ்த்தேசியத்திற்காகத்தொடர்ந்து நிலைத்து நிற்பவர், சிறைக்குச் சென்றவர், தமதிழ் தேசியக் கட்சிகளின் ஒற்றுமைக்காக என்று தொடர்ந்தும் குரல் கொடுப்பவர் மாவை சேனாதிராசாதான். ஒரு தலைவராக அவரது செயற்படுதிறன் கேள்விக்குரியதாக விமர்சனத்திற்குரியதாகஇருந்தாலும்தமிழ்த் தேசியத்தை வெளிக்காட்டுவதில் அவர் ஒரு பத்தரை மாற்றுத் தங்கம் என்பதை தமிழ்ச் சமூகம் நன்கு அறியும். தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும்கூட அவர்தான். அப்படியிருக்கும் நிலையில் அவரை விட்டுவிட்டு சிறீதரனை பிரதம அதிதியாக அழைத்திருப்பது தமிழ்த் தேசியம் சார்ந்த ஒரு நகர்வு மட்டும்தானா?

சிறீதரன் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக வருதைத் தான் விரும்புகிறார் என்று நீதியரசர் சொல்வதன் மூலம்தமிழ்த்தேசியம் என்பது இந்த நகர்வின் வெளிக் கேடயம் (கவர் ஷீல்ட்) மட்டுமே உள்ளே வேறு நோக்கங்கள் இருக்கின்றனஎன்றுபுலப்படுகின்றது. இரண்டு நோக்கங்கள் இருக்கலாம் என்று எனக்குப்படுகின்றது. ஒன்று, ஒருவேளை தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ் அரசுக் கட்சி ஒத்துவரவில்லை என்றால் அதிலிருந்து சிறீதரனைப் பிரித்தெடுத்து தம்மோடு சேர்த்துக்கொள்வதன் மூலம் கிளிநொச்சி வாக்குகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்கிற திட்டம், இரண்டாவது சிறீதரன் தமிழ் அரசுக் கட்சியின்தலைவராகவந்துவிட்டால் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சியோடு கூட்டு வைத்துக்கொண்டு தேர்தலை எதிர்கொள்வதற்கான கதவுகளைத் திறந்து வைத்துக்கொள்வது. உங்களுக்குஎன்னதோன்றுகின்றது வாசகர்களே?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செப்டெம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலின்போது ஏதேனும் ஊழல் அல்லது சட்ட மீறல்கள்காரணமாகசிலவாக்களிப்பு நிலையங்களின் தேர்தலை இரத்துச் செய்ய நேர்ந்தால், அந்த வாக்களிப்புநிலையங்களில்மீண்டும் தேர்தலை நடத்துவதற்கு சுமார் பதினைந்து நாட்கள் ஆகலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டரீதியாககூறப்படாவிட்டாலும், ஜனாதிபதித் தேர்தல் பாரம்பரியமாக சனிக்கிழமையன்று நடைபெறுவதால், ஒக்டோபர் 2ஆம் திகதிக்குமுதலாகவரும்சனிக்கிழமை அதாவது செப்டெம்பர் 28 தேர்தல் நடைபெறும் எனத் தேர்தல் திணைக்களவட்டாரங்களில்இருந்து நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை அடுத்தவாரம்வெளியிடவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ. எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக, தேர்தல்கள் ஆணைக்குழு வரும புதன்கிழமை கூடவுள்ளது. அந்த கலந்துரையாடலில் எட்டப்படும் தீர்மானத்திற்கமைய, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான திகதி இறுதி செய்யப்பட்டு வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான காலம் தொடர்பில் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

## கட்டுப்பாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர்.

அத்துடன், கடந்த இரண்டு வருடங்களில் நடைமுறைப் படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாகவே மக்களுக்கு சலுகைகளையும் நிவாரணங்களையும் வழங்க முடிந்துள்ளது என்பதையும் குறிப்பிடவேண்டும். இதன் மூலம் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடிந்தது. அத்துடன் மக்களின் வருமானத்தை அதிகரிக்கும்வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வங்கி வட்டியை குறைக்கும் நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவதற்கு தேவையான கொள்கை ரீதியிலான முடிவுகளை மத்தியவங்கிஎட்டியுள்ளது. அதன்படி, அடுத்த சில மாதங்களில் மக்களுக்கு மேலும் பல்வேறு நிவாரணங்கள் கிடைக்கும்என்றுஎமக்குநம்பிக்கை உள்ளது.

நுகர்வோர் சட்டத்தில் திருத்தம் செய்யசட்டங்கள்மாற்றப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு வாரங்களில் இது தொடர்பான பரிந்துரைகள் பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படும். நுகர்வோர் மற்றும் வர்த்தகர் இடையே உள்ள புரிந்துணர்வை அதிகரிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி, தற்போது வாரத்திற்கு ஒருமுறை 15 அத்தியாவசியப் பொருட்களின் விலையை அறிவித்து வருகின்றோம். ஆனால் ஆளும்தரப்பு வழங்கும் சலுகைகள் நுகர்வோர்களுக்கு கிடைக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் வர்த்தகசங்கங்களுடன்இதுகுறித்து கலந்துரையாடஎதிர்பார்த்துள்ளோம். நாம் வழங்கும் சலுகைகள் நுகர்வோருக்குவழங்கப்படாவிட்டால் குறிப்பிட்ட சில பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்ய நேரிடும் என்பதையும் கூற வேண்டும் என்றார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஜனாதிபதி தேர்தலை பொறுத்த வரைக்கும் வேட்பாளர் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற முடியாத நிலைமையே காணப்படுகிறது. அதனால்அவர்கள்சிறுபான்மையின மக்களின் வாக்குகளை பெற முனைப்பு காட்டுவார்கள்.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில்எவரும்50சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறாத நிலைமை ஏற்படும்போது நாட்டில் அரசியல் உறுதிபபாடு இல்லாமல்போகும். ஏற்கனேவே நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகிறது. அந்நிலையில் அரசியல் உறுதிப்பாடும் இல்லாது போனால் நாடும் மிக மோசமான பொருளாதாரப்பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடும்.

அத்துடன், தேர்தலுக்காக பெருமளவான நிதியைச் செலவழிக்கப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும். அதுவும் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும். எனவே, அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு வருட காலத்திற்கு ஜனாதிபதி தேர்தலைப் பிற்போடவேண்டும் என்றகோரிக்கையை முன்வைக்க வேண்டும் - என்றார்.

## 22ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் மயக்க நிலை காணப்படுவதால்தான் மூன்று முறைஜனாதிபதியின்பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றத்தில் வியாக்கியானம் கோரப்பட்டு, ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்று உயர்நீதிமன்றம் மூன்று முறையும் தெளிவாக வியாக்கியானம் வழங்கியுள்ளது.

அரசமைப்பின்19ஆவதுதிருத்தம் அவசரஅவசரமாகதயாரிக்கப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன விட்ட தவறை திருத்தம் செய்வதற்காகவே ஜனாதிபதியால் 22ஆவது திருத்தம் கொண்டவரப்படுகின்றது. ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் என்பதில் காணப்படும் சர்ச்சையை நிவர்த்தி செய்வது இந்தச் சட்டமூலத்தின் பிரதான நோக்கமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பணிகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக முன்னெடுக்கிறது. தேர்தல் ஆணைக்குழுவுடன் ஜனாதிபதி ஒருபோதும்கலந்துரையாடவில்லை என ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஆகவே 22ஆவது திருத்தச் சட்டமூலம் ஜனாதிபதித் தேர்தலுக்குஎவ்விதத்திலும்பாதிப்பை ஏற்படுத்தாது.

ஜனாதிபதியின் சிறந்த திட்டங்களினால் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து குறுகிய காலத்தில் மீண்டது என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து நிலையான மீட்சி பெற வேண்டுமாயின் ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பு மீண்டும் பதவியேற்க வேண்டும் என்றார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உச்சவரம்பை மையப்படுத்தி சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய குழப்பத்தைத் தவிர்ப்பதற்காகவே அதன் மீது கைவைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நான் சில விடயங்களை வெளிப்படையாகத் தெரிவிக்க விரும்புகின்றேன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவேளை மைத்திரிபால சிறிசேன மாதுளுவாவே சோபித தேரர் தலைமையில் அரசியல் கட்சிகள் அமைப்புகளுடன் விகாரமாஹாதேவி பூங்காவில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

அந்த உடன்படிக்கையில் அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு உறுதிமொழிவழங்கினார். அதற்கு மறுநாள் அவர் ஜாதிஹ ஹெலய உறுமயவுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார் அதில் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமான அரசமைப்பு மாற்றங்களை மேற்கொள்வதில்லை என்று உறுதியளித்தார்

அதன்படி சர்வ ஜன வாக்கெடுப்பு அவசியமான அரசியலமைப்புமாற்றம்எதனையும் முன்னெடுக்கப்போவதில்லை என்று மைத்திரிபாலசிறிசேன தனது தேர்தல் அறிக்கையிலும் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஆறிலிருந்து ஐந்தாண்டுகளாக குறைக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்ட போதிலும் அதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படுவதால் ஆறு வருடங்கள் என்ற உச்ச வரம்பு தொடப்படவில்லை.

அரசமைப்பின் 83ஆவது பிரிவில் பட்டியலிடப்பட்ட குறிப்பிட்ட சட்டப்பிரிவுகள் அல்லது மேற்கூறிய உச்சவரம்புகளை திருத்த முற்படும் அல்லது முரண்படும் ஒருதீர்மானம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்குபெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும். வாக்கெடுப்பில் மக்களால் அங்கீகரிக்கப்படவேண்டும். பொதுவாக்கெடுப்பு தேவைப்படும் விதிகளின் பட்டியலில் 83ஆவது பிரிவும்சேர்க்கப்பட்டுள்ளதுஎன்பதை கவனத்தில்கொள்ளவேண்டியது அவசியம்

தயாரிக்கப்பட்ட பல வரைவுகள் அனைத்தும் அமைச்சரவை துணைக்குழுவுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டன. இறுதியாக அமைச்சரவை துணைக்குழுவால்அங்கீகரிக்கப்பட்ட வரைவு சட்டவரைவாளருக்கு அனுப்பப்பட்டது அவர் சட்டத்தின்படி மேலும் சில மாற்றங்களைச் செய்தார்.

அது பின்னர் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டதுஅவர் குறிப்பிட்ட சில சரத்துகள் குறிப்பாக ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் சில சரத்துக்களுக்குவாக்கெடுப்புதேவை என்று கருதினார்.

அப்போது பிரதமராக இருந்தவரானரணில்விக்கிரமசிங்க சட்டமாஅதிபருடன்பலசந்திப்புகளை நடத்தி இது குறித்து விவாதித்தார். அப்படியொரு கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன். சட்டமா அதிபரின்நிலைப்பாட்டின்காரணமாக சட்டமூலத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்தது.

விக்கிரமசிங்க பிரதமராக சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டபோது அரசு சார்பில் சட்டமா அதிபர் வாக்கெடுப்பு நடத்த தேவையில்லை என்று வாதிட்டார். சர்வஜன வாக்கெடுப்பு தேவை என்று உச்ச நீதிமன்றம் கூறிய சரத்துகள் நாடாளுமன்றத்தில் வைத்துத் திருத்தப்பட்டன அல்லது திரும்பப் பெறப்பட்டன

மேற்கூறியவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் உச்ச வரம்புகளை குறைக்காததன் முழுப் பழியையும் என் மீது சுமத்துவது பொருத்தமானது என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க நினைத்திருப்பதற்கு நான் வருந்துகிறேன்.

ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேனாவின் உறுதிமொழியைத் தொடர்ந்து வாக்கெடுப்பைத் தவிர்ப்பதன் அடிப்படையில் முழுத் திருத்தச் செயல்முறையும் அமைந்ததுஎன்பதைநான்மீண்டும் வலியுறுத்துகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## இதுவரையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நல்லதொரு நிலைக்கு வந்துள்ளது. எமது கட்சியை பதிவு செய்ய விடக்கூடாது என்றுகூடப் பலர் பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அது கூட எமக்குச் சில காலங்களுக்கு முன்னரே தெரிய வந்துள்ளது.

இன்று எமது கட்சி பதிவு செய்யப்பட்டு, பல இளைர்களை தன்னகத்தே கொண்ட கட்சியாகக் காணப்படுகிறது. நாங்கள் இதுவரையில் என்ன செய்தோம் எனப் பலரும் கேட்கக்கூடும். பல நாடுகளின் உயர்ஆணையர்கள், தூதுவர்கள் எனப் பல்வேறுபட்ட தரப்பினர்களுடன் எமது பிரச்சினைகள் தொடர்பில் பேசி இருக்கிறோம். எமது கருத்துக்களை அவர்கள்உன்னிப்பாகசெவிமடுத்துச் சிலதைச் செய்துள்ளார்கள்.

இன்று உலக நாடுகள் மத்தியில் இலங்கைக்கான ஆதரவு குறைந்துள்ளது. பல நாடுகள் இலங்கைக்கான தமது ஆதரவு நிலைப்பாட்டில் இருந்து விலகியுள்ளன. தமிழர்களின் நிலங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு தொடர்பில் பல தரப்பிடமும் எடுத்து கூறி வெளிக்கொணர்ந்துள்ளோம்.

அது மட்டுமின்றி எங்களுடைய பிரச்சினைகளைப் பற்றி சிங்களத்தில் பல விடயங்களைக் கூறிவருகின்றோம். சிங்கள மக்கள் மத்தியில்தமிழர்களின்பிரச்சினைகள் குறித்து சிங்கள மொழியில் எடுத்துக் கூறியுள்ளோம். இன்னமும் கூறி வருகிறோம். அதேவேளை எமது மக்களின் வாழ்வாதரத்தையும் மேம்படுத்தி வருகிறோம். அதற்கான உதவிகளையும் செய்து வருகின்றோம்.

எமது கட்சி இளையோரின் கட்சியாகும். அதற்கு நீங்கள் ஏன் தலைவாராக இருக்கிறீர்கள் எனக் கேட்கலாம். குழந்தையை தாயொருவர்பிரசவிப்பதற்குமுன்னர் அந்தக் குழந்தை ஆரோக்கியமான பிறக்க வேண்டும் என்பதற்காக செவிலி தாயொருவர்கூட இருந்து அந்த தாயைப் பார்த்துக்கொள்வார். அதேபோலவே இந்தக் கட்சியை நல்ல நிலையில் வளர்த்து இளையோரிடம் கையளித்துவிட்டு சம்பந்தன் போல போய்ச் சேர்ந்து விடுவேன் - என்றார்.

## ராஜபக்சக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 22ஆம் திருத்த சட்டத்தை கொண்டு வருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. இந்தச் சட்டத்தால் எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் ஜனாதிபதி தேர்தல் நடக்க இருக்கும் போது இந்த திருத்தம் தேவையா? எனும் கேள்வி எழுகிறது.

இப்போது ஏன் அவரசப்பட்டு மாற்ற முனைகிறார்கள் என இது தேர்தலைகுழப்பும்நடவடிக்கையாக இருக்கும் என சந்தேகிக்கிறோம். உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், நாடு வக்குரோத்துக்கு போய்விட்டது என தேர்தலை கால வரையின்றி ஒத்தி வைத்துள்ளனர்.

தேர்தல் இரத்துச் செய்யப்பட வில்லை.அதனால்வேட்புமனுக்கான காசுதிருப்பிக்கொடுக்கப்படவில்லை. சுயேச்சையாக வேட்பு மனு தாக்கல் செய்தவர்களுக்கான கட்டுப்பணம் அதிகம். அதுகூடத் திருப்பித் தரப்படவில்லை.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறலாம் என்கிற நிலையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்தி திட்டங்களுக்கு என 5 கோடி ரூபாய் முதல் 10 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றது எனவும் செய்திகள் மூலம் அறிந்துகொண்டேன்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்பதற்காகவே, அவ்வாறு அபிவிருத்திக்கு என கோடிக்கணக்கான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட கூடியவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி வந்து 13ஆம் திருத்தம் தருவோம் என்கிறனர். ஆனால் மாகாண சபை தேர்தல் நீண்ட காலமாக நடத்தப்படாமல் இருப்பது பற்றி அவர்கள் கதைக்கவே இல்லை என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குறுதியை நிறைவேற்ற கோரி கையெழுத்துகள் சேகரிப்பு

## யாழ்ப்பாணத்தில் வெள்ளியன்று நடந்தது






தேர்தல் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரி கையெழுத்து பெறும் வேலை திட்டமொன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக அதை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் குறித்த கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

தேர்தல் காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வழக்கமாக நிறைவேற்றப்படுவது இல்லை அவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் இயற்றப்படவேண்டும்.

இவ்வாறு பொய் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்ற போது அதனால் பொதுமக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது தொடர்பாக 17 மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் குறித்த கை எழுத்து போராட்டம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது. (05)

# மூதூர் யுவதி கொலை சந்தேகநபர்கள் ஏழு பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

சேருநுவர, தங்க நகர் பகுதியைச் சேர்ந்த இளம் யுவதியின் கொலை தொடர்பான வழக்கில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 7 பேருக்கும் மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டுள்ளதுடன் விசாரணையை திருகோணமலை மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு மாற்றவும் கட்டளை பிறப்பித்துள்ளார்.

யுவதியின் கொலை வழக்கு வெள்ளிக்கிழமை மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.தஸ்னீம் பௌசான் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் வழக்கு தொடுநரான மூதூர் பொலிஸ் பொறுப்பதிகாரி சந்தேக நபர்களான 2ஆம், 3ஆம், 4ஆம், 6ஆம் எதிராளிகளை குறித்த வழக்கில் இருந்து விடுவிக்குமாறு விண்ணப்பித்திருந்தார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் இந்த படுகொலை சம்பவம் தொடர்பில் திருப்திகரமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை எனவும் விசாரணைகள் பக்கச்சார்பாக இடம்பெறுகின்றன எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கருதுவதாக விண்ணப்பித்திருந்ததோடு, இந்த வழக்கு விசாரணையை வேறு தரப்பினருக்கு கையளித்து முறையான விசாரணையை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியை பெற்றுக்கொடுக்குமாறு தமது வாதங்களை முன்வைத்தனர்.

அத்துடன் குற்றவாளிகள் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் விண்ணப்பங்களுக்கேற்ப 2ஆம், 3ஆம், 4ஆம், 6ஆம் எதிராளிகளாக குறிப்பிடப்பட்டுள்ள சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு தமது சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

இந்த வழக்கில் இரு தரப்பு வாதங்களை ஆராய்ந்த நீதிபதி சந்தேக நபர்களுக்கு மேலும் 14 நாள்கள் விளக்கமறியலை நீடித்ததோடு, இந்த வழக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றவும் கட்டளை பிறப்பித்திருந்தார்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக சட்டத்தரணிகளான ஏ.ஆர்.சுஹாட், ஏ.ஏ.எம்.ஷகிடீன், எம்.எஸ்.எம்.ஷகீர், அமானுல்லா ஷிபா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகரைச் சேர்ந்த நடேடஷ்குமார் வினோதினி என்ற 25 வயதான இளம்பெண் காணாமல் போயிருந்த நிலையில், கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி கிராமத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்த கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பிரதான சந்தேக நபரான யுவதியின் காதலன் உட்பட அவரது தந்தை, சிறிய தந்தை, சகோதரி, வீட்டில் வேலை செய்யும் நபர், ஜேசிபி வாகனத்துடன் தொடர்புடைய 2 நபர்கள் உட்பட 7 பேர் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிளிநொச்சியில் நாய்களுக்கு விசர்த்தடுப்பூசி ஏற்றும் பணி

*தற்போது ஏற்பட்டுள்ள வெப்ப நிலை மற்றும் நாய்களுக்கு விசர்நோய் வருகின்ற போது அதன் மூலம் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கும் நோக்குடன் நேற்று சனிக்கிழமை முதல் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் விலங்கு விசர்த்தடுப்பூசி நிலையத்தின் ஏற்பாட்டில் பழைய வைத்தியசாலை வளாகத்தில் தடுப்பூசி வழங்கும் பணி முன்னெடுக்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட தொற்றுநோய் வைத்தியர் மு.ரஞ்சன் தெரிவித்துள்ளார். வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8 மணி முதல் 12 மணிவரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. மக்கள் தங்கள் நாய்களுக்கு நாய்களை கூட்டிவந்து தடுபபூசியை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (05 – 113)*

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

## 42 மில்லியன் ரூபா பெறுமதியானவையாம்

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட 42 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் பன்னிப்பிட்டிய, கொட்டாவ பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஆண் என்பதுடன் இவரிடமிருந்து 22, 000 வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகள் அடங்கிய 110 சிகரெட் பெட்டிகள் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் வியாழக்கிழமை மாலை டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

மற்றைய நபர் நீர்கொழும்பு கொச்சிக்கடையில் வசிக்கும் 41 வயதுடைய பெண் என்பதுடன் இவரிடமிருந்து 20, 000 வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகள் அடங்கிய 100 சிகரெட் பெட்டிகள் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் வியாழக்கிழமை அரேபியா விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இவர்கள் இருவரும் சட்டவிரோதமான முறையில் 42 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகளை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

கைதான இருவரும் வியாழக்கிழமை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு, எதிர்வரும் 24 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (05)

# இரு மாதங்களாக சம்பளம் தரவில்லை: துன்பப்படுத்தித் திருப்பி அனுப்பினர்

## சவூதியில் இருந்து நாடு திரும்பிய பணிப்பெண் குற்றச்சாட்டு



பணிப்பெண்ணாக சவூதிக்கு சென்ற எனக்கு இரண்டு மாத சம்பளங்கள் தரவில்லை. பேசியதை விட அதிகமாக வேலை வாங்கி துன்பப்படுத்திவிட்டு நாட்டுக்கு அனுப்பிட்டார்கள். அங்குள்ள விசேட தேவைக்குட்பட்ட பிள்ளையையும் மீளுங்கள் என துணுக்காய், ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த கலாநாதன் கிருஸ்ணவேணி தெரிவித்துள்ளார்.

தனது அவல நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள் குடியேறிய பின்னர் குடும்ப வறுமை காரணமாக பணிப்பெண்ணாக வெளிநாடு சென்றேன். அதுவும் மன்னராட்சி நடந்த, சட்டம் நிறைந்த இஸ்லாமிய நாடு என சவுதியை தெரிவு செய்தேன். ஏஜென்சி மூலமாக சட்ட பூர்வமாகவே சென்றேன். நான் ஏழு பேர் கொண்ட குடும்பத்தின் வீட்டு வேலைக்கு தான் சென்றேன். மேலதிக வேலை செய்ய என்னால் முடியாது. போகும் போது எனக்கு 49 வயது. ஆரம்ப சம்பளம் அவர்களது பணத்தில் 900 தந்தார்கள். முதல் மாத சம்பளம் இன்னும் தரவில்லை. பின்னர் எனக்கு மேதிலக சமையல் வேலைகள் தந்தார்கள்.

தோட்டம் வேலை உட்பட பல வேலைகளை அவர்களது தாய் இறந்ததும் செய்தேன். நான் சிரமப்பட்டேன். என்னை துன்பப்படுத்தினார்கள். காலில் அடித்தார்கள். இரண்டு வருடத்தில் திரும்பி வருவதாகவே சென்றிருந்தேன். ஆனால் என்னை வர அவர்கள் விடவில்லை. 2015 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் போன நான் கடைசியாக என்னை துன்பப்படுத்தி அங்கு பொலிஸில் நிறுத்தி இறுதியாக அரசாங்கத்தால் 2024 ஆம் ஆண்டு தான் அழைத்து வந்தனர். எனக்கு இறுதி மாத சம்பளமும் தரவில்லை. நான் உழைக்க சென்று தற்போது பணமும் இல்லை. உடலும் இயலாத நிலையில் உள்ளேன். அந்த குடும்பத்தில் விசேட தேவையுடைய ஒரு பிள்ளை உள்ளது. அதுவும் அங்கு துன்பப்படுகிறது. அதனையும் காப்பாற்ற வேண்டும். எனது இரண்டு மாத சம்பளமும் தேவை எனத் தெரிவித்தார். (05 -100)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தயாராவோம்!

'புவியின் சராசரி ஆண்டு வெப்பநிலை 1.5 செல்சியஸ் அளவுக்கு மேல் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ஏதாவது ஒரு ஆண்டில் உயர 80 சதவீதம் வாய்ப்புள்ளது' என உலக வானிலை அமைப்பு அண்மையில் தெரிவித்துள்ளது.

பாரிஸ் ஒப்பந்தத்தின் இலக்கான புவியின் சராசரி மேற்பரப்பு ஆண்டு வெப்பநிலையை தொழிற்புரட்சிக் காலமான 1850 –1900 இடைப்பட்ட காலத்தில் நிலவிய சராசரி ஆண்டு வெப்பநிலையவிட 1.5 ஏளீ உயர விடாமல் தடுப்பதற்கான முயற்சிகளை நாம் மேலும் வேகப்படுத்த வேண்டியதன் அவசரத்தை இந்த அறிக்கை நமக்கு உணர்த்துகிறது.

உலக வானிலை அமைப்பின் சார்பில் இங்கிலாந்தின் வானிலை நிறுவனமான யுகே மெட் ஒவ்பிஸ் தயாரித்துள்ள பத்தாண்டு அறிக்கை 05.06.2024 அன்று வெளியானது. இந்த அறிக்கை 15 நாடுகளின் வானிலை அமைப்புகளின் தரவுகள் மற்றும் உலக வானிலை அமைப்பின் 190 உறுப்பினர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி 2028ஆம் ஆண்டுக்குள் ஏதேனும் ஒரு ஆண்டில் புவி வரலாற்றில் பதிவானதிலேயே அதி உயர் வெப்பம் பதிவாக 87% வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது. 2023ஆம் ஆண்டுதான் இதுவரை பதிவானதில் அதிக வெப்ப நிலவிய ஆண்டாக இதுவரை உள்ளது. 2024 முதல் 2028 வரையிலான மொத்த காலமும் புவியின் சராசரி வெப்பநிலை 1.5 ஏசெல்சியஸுக்கு மேல் உயர்ந்து நிலவ 47% வாய்ப்புள்ளதாகவும் இவ்வறிக்கை குறிப்பிடுகிறது. குறைந்த காலத்திற்கு சராசரி வெப்பநிலை 1.5 செல்சியஸ் அளவுக்கு உயர்வதை நிரந்தரமாக புவியின் வெப்பநிலை 1.5 செல்சியஸ் அளவுக்கு உயர்ந்ததாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்றாலும் இந்த எச்சரிக்கையை உலக நாடுகள் தீவிரமாக எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

நியூ யார்க்கின் அமெரிக்க இயற்கை வரலாற்றுக்கான அருங்காட்சியகத்தில் காலநிலை மாற்றம் குறித்து சிறப்புரை ஆற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அண்டோனியா குட்டரெஸ் உலக வானிலை அமைப்பின் அறிக்கையினையும் சுட்டிக்காட்டிப் பேசினார். நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டியது நம்மிடமே உள்ளது. நமது காடுகள், நமது ஈரநிலங்கள் மற்றும் நமது பெருங்கடல்கள் வளிமண்டலத்திலிருந்து கார்பனை உறிஞ்சுகின்றன. 1.5 ஏளீ என்கிற இலக்கை உயிருடன் வைத்திருக்க அவை இன்றியமையாதவை, அல்லது அந்த வரம்பை மீறினால் நம்மை அது மீண்டும் பின்னோக்கிக் கொண்டு செல்லும். அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும்– எனக் கூறினார்.

நாம் தமிழர்கள் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு இணையாக இந்த விடயத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாதது. ஏனெனில் காலநிலை மாற்றத்தால் உடனடியாகப் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகள் தமிழர் தாயகப் பரப்பிலேயே அதிகமுள்ளன.

பாரிஸ்ஒப்பந்தத்தின்கீழ், நாடுகள்நீண்டகால உலகளாவிய சராசரி மேற்பரப்பு வெப்பநிலையை தொழில்துறைக்கு முந்தைய நிலைகளைவிட 2 ஏசெல்ஸியசுக்கு குறைவாக வைத்திருக்கவும், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அதை 1.5 டிகிரி செல்சியசுக்கு மட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடரவும் ஒப்புக்கொண்டன. 1.5 டிகிரி செல்சியசுக்கும் அதிகமான வெப்பமயமாதல் மிகவும் கடுமையான காலநிலை மாற்ற தாக்கங்கள் மற்றும் தீவிர வானிலை மற்றும் வெப்பமயமாதல் நிகழ்வுகளைக் கட்டவிழ்த்துவிடும்அபாயம்உள்ளதுஎன்றுஅறிவியலாளர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர்.

புவி வெப்பமடைதலின் தற்போதைய மட்டங்களில் கூட, ஏற்கனவே பேரழிவு தரும் காலநிலை தாக்கங்கள் உள்ளன. இவற்றில் மிகவும் தீவிர வெப்ப அலைகள், தீவிர மழை நிகழ்வுகள் மற்றும் வறட்சி ஆகியவை அடங்கும்; பனிக்கட்டிகள், கடல் பனி மற்றும் பனிப்பாறைகள் குறைவு; கடல் மட்ட உயர்வு மற்றும் கடல் வெப்பமடைதல் ஆகியவற்றை நாம் இப்போதே சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அடுத்துவரும்ஆண்டுகளில்அவை இன்னும்தீவிரமாகும் என்னும்போதும் அதன் தாக்கங்களை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோமா? தயாரில்லை என்றால் இனியாவது அக்கறை எடுத்துத் தயாராகவேண்டியது அவசியமல்லவா?



# ஊடுகொழுப்பு உணவுகள் உஷார்

கு.கணேசன்



மாலை நேரத்தில் நொறுக்குத்தீனி தின்னக் கேட்காத குழந்தை உண்டா? பீட்சா, பர்கருக்கு ஆசைப்படாத டீன்ஏஜினர்தான் உண்டா? அலுவலகத்தில் முடிந்து வீட்டுக்குத் திரும்பியதும், கொறித்துக்கொள்ள ஏதாவது சிற்றுண்டி இல்லாவிட்டால், பாலித்தீவு எரிமலைபோல் பலருக்குக் கோபம் கொப்பளிக்கிறதே, ஏன்? எல்லாம் சிற்றுண்டிகளுக்கு அடிமையாகியதன் விளைவு.

### சத்தான பாரம்பரிய உணவு

நினைத்துப் பாருங்கள். நம் முன்னோர்கள் மேற்கொண்ட பாரம்பரிய உணவுப் பழக்கத்தில் சிற்றுண்டிகள் கிடையாது மூன்று வேளை சாப்பாடுதான். இதில் கண்ணைப் பறிக்கும் நிறங்கள் கிடையாது. வாயூறவைக்கும் ருசிகள் இருக்காது. வாய்க்குள் நுழைய மறுக்கும் பெயர்கள் கொண்ட விதவிதமான உணவுகளைக் காணமுடியாது. ஆனால், மனித ஆரோக்கியத்தை மேம்படுத்தும் முதன்மைச் சத்துகள் அநேகம் அந்த உணவில் இருந்தது. நம் உழைப்புக்கும் உற்சாகத்துக்கும் தேவையான ஊட்டச்சத்துகள் கட்டாயம் இருக்கும்.

உள்ளூார்க் காய்கறிகள், அன்றாட இறைச்சிகள், குளத்து மீன் என ஊருக்கு ஊர், சூழலுக்கு ஏற்ப, பருவகால மாறுதலுக்கு ஏற்பக் கிடைக்கும் உணவுப் பொருள்களில் நம் பாரம்பரிய உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில், பாலும் பருப்பும், தயிரும் சார்ந்த புரோட்டீன் மிகுந்த உணவுகள், சிறுதானியங்கள், பழங்கள், பச்சைக் காய்கறிகள், கீரைகள் அதிகம் சேர்க்கப்படுகின்றன. நாட்டில் இவை பல தலைமுறைகளாகப் பயன்பாட்டில் உள்ளதால், உடலுக்குக் கெடுதல் செய்யாது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். எனவேதான், சென்ற தலைமுறையில், உடல் பருமன் பிரச்சினை என்பது தொகுதிக்கு வராத அமைச்சர்போல் ஒதுங்கியே இருந்தது.

### பிடித்தது 'பெல்லி சனி'!

பாரம்பரியப் பாதை தவறி, மேற்கத்திய உணவுகள் எனும் நாகரிக மோகினிகளுக்கு எப்போது நாம் மயங்கினோமோ, அப்போது பிடித்த அஸ்டமத்து சனி இல்லை, இல்லை, 'பெல்லி சனி' எத்தனை 'சனிப் பெயர்ச்சிகள்' வந்து போனாலும், நம்மை விட்டு விலக மறுக்கிறது என்பதுதான் தற்போதைய யதார்த்தம். பொதுவாக, காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளை உணவு வகைகளுக்கு வீட்டில் சமைத்த உணவுகள்தான் பிரதானம். ஆனால், இப்போதெல்லாம் அநேக வீடுகளில் சிற்றுண்டிகள் வெளிச்சரக்காகத்தான் இருக்கிறது. அவை பெரும்பாலும் மேற்கத்திய உணவு வகையைச் சேர்ந்த நொறுக்குத்தீனியாகவே இருக்கும் என்பதைச் சின்னக் குழந்தையும் சொல்லும்.

### ஊடுகொழுப்பு உலகம்!

சிறு குழந்தைகள் என்றால், வெதுப்பகப் பொருட்கள்- பிஸ்கட், சொக்லேட், சிப்ஸ், லேஸ், க்ரீம் கேக், குக்கீஸ் பாடசாலை வயது என்றால், லாலாக் கடையில் கிடைக்கும் பொருட்களும்- லட்டு, பூந்தி, அல்வா, ஜாங்கிரி, பஜ்ஜி, போண்டா, சமோசா, சான்ட்விச், பக்கோடா, முறுக்கு, மிக்சர், பப்ஸ், பாப்கார்ன் அதற்கு அடுத்த வயது என்றால் ஃபாஸ்ட் ஃபுட் அயிட்டங்கள்- பீட்சா, பர்கர், கிரில் சிக்கன், ஃபிரைடு சிக்கன், ஃபிரஞ்ச் ஃபிரை, பரோட்டா, நூடுல்ஸ், பானிபுரி

இவை எல்லாமே செயற்கைச் சுவையூட்டிகளால் தயாரிக்கப்படுபவை 'கார்போ'க்கள் மிகுந்த கோதுமை மாவில் பிறந்தவை நார்ச்சத்தும் ஊட்டச் சத்தும் குறைந்தவை அதிக உப்பு, அதிக இனிப்பு, அதிகக் கொழுப்பு கொலுவிருப்பவை கலோரிகள் குவிந்திருப்பவை. அது மட்டுமா? ரீஃபைன்ட் ஆயில், பாமாயில், வனஸ்பதி போன்றவற்றில் சமைக்கப்படுகிற கொழுப்புக் குவியல்கள். மீண்டும் மீண்டும் சூடுபடுத்திய எண்ணெய்யில் உருவாகிற புற்றுநோய்க் காரணிகள். இவற்றில் 'டிரான்ஸ் ஃபேட் (Trans fat) எனும் ஊடுகொழுப்பு மிக அதிகம். கொழுப்புகளிலேயே கெட்ட கொழுப்பு இதுதான்.

உடல் பருமனுக்கு அட்வான்ஸ் செலுத்தும் மோசமானது என்றும் இதைச் சொல்லலாம். இது 'உயர் குருதி அழுத்தம் பிரச்சினை'க்குத் தோரணம் கட்டும் சர்க்கரை நோய்க்குப் பச்சைக் கொடி காட்டும் இதயத்துக்குப் பரம வைரி சீக்கிரத்தில் மாரடைப்பை வரவழைக்கும் எதிரி பக்கவாதம் வருவதற்குப் பாதை காண்பிக்கும் பகைவன். குடல் எரிச்சல் நோய்க்கும் (Irritable Bowel Syndrome - IBS) பெருங்குடல் புற்றுநோய்க்கும் நெருங்கிய நண்பன். வயதான காலத்தில், மூளை - அறிவாற்றல் (Cognitive Function) தொடர்பான பிரச்சினைகளைக் கொண்டுவரும் தூதுவன். உதாரணம், 'அல்சைமர;' (Alzheimer disease) எனும் முதுமை மறதி நோய்.

### 'நாகரிக உணவுப் போதை'

'இவை எல்லாம் எங்களுக்கும் தெரியும், மருத்துவர். ஊடுகொழுப்புள்ள உணவுகளை எப்போதாவது ஆசைக்கு எடுத்துக்கொள்வதில் தவறில்லை என்கிறார்களே!' என்று கேட்கிறவர்களுக்கு என் பதில் இதுதான்: எப்போதாவது என்று ஆரம்பமாகும் இந்தத் தவறான உணவுப் பழக்கம் உடும்புப் பிடியாக உங்களைப் பிடித்துக்கொள்ளும் என்பதில்

(8ஆம் பக்கம் பார்க்க..)









அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் இன்றையதினம் இரதோற்சவம் இடம்பெற்றது. வசந்த மண்டப பூசையை தொடர்ந்து காலை 11 மணியளவில் அம்பாள் இரதத்தில் எழுந்தருளினார். இதன்போது பெருமளவு பக்தர்கள் பங்கேற்றதுடன் அங்கப்பிரதட்சணம் மற்றும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். ஆலய மஹோற்சவம் கடந்த 11ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளை தீர்த்தோற்சவத்துடன் நிறைவுக்கு வரும்


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=





## ஆசிரியர் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் ஞாபகசக்தியை அதிகரித்தல் தொடர்பான பயிற்சி

(பாறுக் ஷிஹான்)

கல்முனை அஸ் - ஸ/ஹறா வித்தியாலய தரம் 05 மாணவர்கள் ஆசிரியர்களுக்கான பரீட்சை வழிகாட்டலும் ஞாபகசக்தியை அதிகரித்தல் தொடர்பாகவும் பயிற்சி பட்டறை வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அதிபர் எம். எச்.எஸ்.ஆர். மஜீதிய்யா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வளவாளராக அஷ்ஷேய்ஹ் ஆதில்ஹசன் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் உதவி அதிபர் ஏ.எப்.மிஸ்னா, அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல்.ஏ.அமீர், வகுப்பாசிரியர்களான எம். எச்.றஹானா, எம். பி.பாயிசா, எஸ்.ரி.றிசானா, இஸட் ஸவாஹிறா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மேலும் தரம் 05 மாணவன் முஹம்மட் பிலால் அப்ஷாரியின் தந்தை அப்துல் ஜப்பார் றிபாய் அனுசரணையில் வளவாளர் ஆதில்ஹசன் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## மரக்கிளை முறிந்து விழுந்து ஒருவர் சாவு



வலப்பனை மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்குப்பட்ட அம்பட்டிகோட பகுதியில் வியாழக்கிழமை வீட்டுக்கு அருகில் உள்ள மரத்தின் கிளை ஒன்று முறிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 47 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் சீரற்ற வானிலையால் காற்றின் தாக்கத்தால் இந்தக் கிளை முறிந்து தலையில் விழுந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மத்துரட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## 48 வருடங்களாக அரசிடமிருக்கும் கதிர்காமம் இ.கி.மிசன் மடம் மீளக் கையளிக்கப்படுமா?

### சர்வதேச இந்து மக்கள் கேள்வி

( வி.ரி.சகாதேவராஜா)

கதிர்காமத்தில் 48 வருடங்களாக அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ள இ.கி.மிஷனுக்குச் சொந்தமான யாத்திரீகர் மடம் மீண்டும் மிஷனிடம் கையளிக்கப்படுமா? என்று சர்வதேசம் வாழ் இந்து மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

குறித்த கதிர்காமம் இ.கி.மடம் 1953 இல் பிரதமர் டட்லி சேனநாயக்காவால் திறந்து வைக்கப்பட்டது.

1943 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல அமைப்புகள் கதிர்காமத்தில் உள்ள புனித ஆலயத்திற்கு வரும் ஆயிரக்கணக்கான யாத்திரீகர்களுக்கு சேவை செய்யத் தொடங்கியது. அதன் ஓரங்கமாக உலகளாவிய ரீதியில் வியாபித்து ஜீவசேவையாற்றிவரும் இராமகிருஷ்ண மிஷன் அமைப்பும் கதிர்காமத்தில் காலூன்றியது.

அதன் காரணமாக விசாலமான கட்டிடங்கள் கட்டப்பட்டு ராமகிருஷ்ண மிஷன் மடம் 1953 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் தேதி அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த மாண்புமிகு டட்லி சேனாநாயக்க அவர்களால் முறையாகத் திறந்து வைக்கப்பட்டது.

அப்போதிருந்து, மத வேறுபாடின்றி யாத்ரீகர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்பட்டது.

ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் நடக்கும் வருடாந்த திருவிழாவின் போது, 17 நாட்களுக்கு தொடர்ச்சியாக, ஒரு நாளைக்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட (10,000) யாத்ரீகர்களுக்கு இலவச உணவை மிஷன் வழங்கியது. மத விரிவுரைகள், சொற்பொழிவுகள் மற்றும் பஜனைகள் மடத்தில் வழக்கமான நடவடிக்கைகள். 1976 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் வரை மிஷன் ஒரு குடியுரிமை சுவாமியின் மேற்பார்வையின் கீழ் அதன் உன்னத சேவைகளைத் தொடர்ந்தது.

அத்தகைய உன்னத ஜீவ சேவையாற்றிய இகிமிசன் மடத்தை மீண்டும் ஒப்படைத்து சமாதான பூமி புனித பூமி என்ற வாசகத்திற்கு அர்த்தம் சேர்க்குமாறு உலக இந்துக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவும் குறிப்பாக பிரதமர் மோடியும் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# ஜப்பானின் நரிட்டா விமான நிலையத்தில் அநுரகுமார திசாநாயக்கவுக்கு வரவேற்பு





நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஜப்பானின் நரிட்டா சர்வதேச விமானநிலையத்தில் இலங்கையர்களால் வரவேற்கப்பட்டார். ஜப்பானில் வாழும் இலங்கையர்களுக்கும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமாரவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று இரவு ஜப்பான் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். தேசிய மக்கள் சக்தியின் வெளிவிவகாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜப்பானில் வாழ்கின்ற இலங்கையர்களுடனான சந்திப்பில் பங்கேற்பதற்காக சென்றுள்ளார். இதற்கமைய ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு ஜப்பானில் சுகுபாவில் உள்ள யதாபே சிட்டிசன் அரங்கில் ஜப்பானில் வாழும் இலங்கையர்களை சந்திக்கவுள்ளார். திங்கட்கிழமை ஜப்பானில் உள்ள தொழில்வாண்மை யாளர்களையும் சந்திக்கவுள்ளார். அத்துடன் ஜப்பானின் உயர்மட்ட இராஜதந்திரிகளையும் திசாநாயக்க சந்திக்கவுள்ளார். (05)

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அப்போது அதன் தலைவர் சஜித் பிரேமதாச தானும் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பில் போட்டியிடவுள்ளார் என்று தெரிவித்தார்.

எது எப்படியோ, இறுதியில் அந்த வாக்கெடுப்பில்அவர்போட்டியிடாமல், டலஸ்அழகப்பெருமவைபோட்டியிட வைத்தார். அந்தநேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் குழுவொன்றுஎனக்குவாக்களித்தது. அதேபோன்று, தமிழ் கட்சிகள் மற்றும் ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடினேன். அவர்களின் ஆதரவையும் நான் பெற்றேன்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பொருளாதாரம் முற்றிலுமாக சரிந்துவிட்டிருந்தது. கீழ்மட்ட நிர்வாகப் பொறிமுறையும் அரசியல் பொறிமுறையும் தகர்ந்து போயிஷருந்தன.

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் வீடுகளை தீயிட்டுக் கொளுத்தி, அவர்கள் வீதிக்கு வராமல் மிரட்டும் சூழல் எங்கும் காணப்பட்டது. பொது ஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள் மாத்திரமன்றி ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வீதியில் இறங்கக்கூடிய சூழல் இருக்கவில்லை.

இந்நிலைமேலும்நீடித்திருந்தால் கிராமத்தின் ஆட்சியை கலகக்காரர்கள் கைப்பற்றி இருப்பார்கள். கீழ்மட்ட அளவில் அதிகாரத்தைக் கைப்பற்றவே அவர்கள் முயன்றனர். இந்தச் சவால்களை முறியடித்து நாட்டை படிப்படியாக முன்னேற்றுவதற்கு என்னால் முடிந்தது. இந்தப் பயணத்தின்போதுஎதிர்ப்புகளையும்போராட்டங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்தப் பின்னணியில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வந்தது. ஆனால் அதற்குப் பணம் ஒதுக்கும் திராணி இருக்கவில்லை. அந்தத் தேர்தலுக்குப் பணம் ஒதுக்குவதைவிட, முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பல விடயங்கள் அன்று இருந்தன. மருந்து, எரிபொருள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய பணம் செலவிட வேண்டியிருந்தது.

அதன்போது, அன்று இருந்த தேர்தல்கள் ஆணைக்குழு, உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்காமல் சாலிய பீரிஸிடம் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டது. அது தவறான செயல் என்பதைக் கூற வேண்டும். எப்படியோ பின்னர் அதன் உறுப்பினர்கள் இராஜினாமா செய்தனர். புதிய குழு நியமிக்கப்பட்டது. அந்த நேரத்திலும் நான் உண்மையைக் கூறினேன். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நாட்டில் பணமில்லை என்பதை மீண்டும் தெரிவித்தேன்.

நான் அவ்வாறு செயற்படாமல், பொருளாதார அபிவிருத்தியை ஒதுக்கிவிட்டு தேர்தலை நடத்தி இருந்தால், இன்று இந்த நாட்டுக்கு ஏற்படும் அவலநிலையை நான் கூற வேண்டியதில்லை. அப்படிச்செய்தால் நாடுஅன்றுஇருந்தநிலையிலிருந்து மீள முடிந்திருக்குமா?

அஸ்வெசுமவிற்கு, சமுர்த்தியைப் போன்று மூன்று மடங்கு பணம் ஒதுக்க முடியுமா? 'உறுமய' காணி உறுதிப்பத்திரம்வழங்கும்திட்டத்தை செயல்படுத்த முடியுமா? அப்படி நடந்திருந்தால் எங்களால் இவை ஒன்றையும் செய்திருக்க முடியாது.

எவ்வாறாயினும், இந்த சவால்களை வெற்றிகொண்டு நாட்டின்பொருளாதாரத்தைவலுவான அடித்தளத்தில்முன்னோக்கிகொண்டு வந்துள்ளோம். அதனால்தான்இன்று மக்கள் கையில் பணம் இருக்கிறது. இந்நாட்டில் அவதியுறும் சாதாரண மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்க விரும்பினேன்.

அதன்படி, அவர்களுக்கு அஸ்வெசும வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. தலா பத்து கிலோ அரிசி வழங்கப்பட்டது. 'உறுமய' திட்டத்தின் கீழ் முழு உரிமையுள்ள காணி உறுதிகள் வழங்கப்பட்டன. அடுக்கு மாடிகுடியிருப்பில்வசிப்பவர்களுக்கு வீட்டு உரிமை வழங்கப்படுகிறது. மேலும்விவசாய நவீனமயமாக்கல் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம், கீழ் மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதிஒதுக்குவதற்குஎம்மால்முடிந்தது. இந்த நடவடிக்கைகளால் மக்கள் இன்று நிம்மதி அடைந்துள்ளனர்.

அன்றைய தினம் நாட்டில் உள்ள பெருந்தொகையான மக்கள் தமது வாக்குகளை மக்கள் விடுதலை முன்னணிக்கு வழங்குவதாக அறிவித்தனர். ஆனால் இன்று அந்த நிலை மாறிவிட்டது. அவர்களை இன்று காணவில்லை. மற்றொரு பகுதியினர் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்கப் போவதாக அறிவித்தனர்.

இன்றுஅவர்களும்அமைதியாக இருக்கிறார்கள். நாம் முன்னெடுத்த வலுவானவேலைத்திட்டங்களினால் அவர்களால்மக்கள்மத்தியில்செல்ல முடியவில்லை. நாம் உருவாக்கிய சக்தியை அவர்களால் எதிர்கொள்ள முடியவில்லை. அதற்குஅவர்களிடம் பதில் இல்லை. ஆனால் எங்களின் செயற்பாட்டை நாம் இப்போதுதான் ஆரம்பித்துள்ளோம்.

இன்று இங்கு கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். இது தொடர்பாக சட்டமா அதிபருடன் கலந்துரையாடதிட்டமிட்டுள்ளோம். எவ்வாறாயினும் எதிர்வரும் தேர்தலுக்குப்பின்னர் தற்போதைய தடையை நீக்க நடவடிக்கை எடுப்போம். வேட்புமனு தாக்கல் செய்துஒருவருடம்கழித்துமீண்டும் தேர்தலை நடத்த முடியாது.

புதியவர்களுக்கும் போட்டியிட வாய்ப்பு அளிக்க வேண்டும். 1988 இல் பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைஏற்றுக்கொண்ட விதம்எனக்குஞாபகம்இருக்கின்றது. ஆனால் அந்த நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியால்அந்த வேட்புமனுக்கள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டு புதியவேட்புமனுக்கள்கோரப்பட்டன. அவ்வாறேஉங்கள்அனைவருக்கும் நீதியை நிலைநாட்ட எதிர்காலத்தில் செயற்படுவோம். இன்று நீங்கள் பிரதேச மட்டத்தில் மக்களிடம் செல்ல ஒரு நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அதைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் சென்று உண்மையைக் கூறுங்கள். நாங்கள் கடந்து வந்த கடினமான பயணம் குறித்து மக்களிடம் உள்ள புரிதலை அதிகரிக்கச்செய்யுங்கள். உங்களால் அதனைச் செய்ய முடியும்.

மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட குழுக்கள் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தொலைநோக்குடைய, தெளிவான திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது தெரிகிறது. இவர்கள் போலிப் பிரசாரம் செய்வதையும் மக்கள் அறிந்துகொண்டுள்ளனர். பொய் சொல்வதால் நாட்டை முன்னேற்ற முடியாது.

சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளை போல இலங்கையை முன்னேற்றுவதற்கான முயற்சிகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். நாட்டுக்கு பொருத்தமான அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். பலகட்சிகள்இருக்கலாம். ஆனால் இலக்கு ஒன்றாக இருக்க வேண்டும்.

அரசியல் கட்சிகள் தனித்தனியாகச் செயல்படும் நேரங்கள் இருக்கலாம். ஆனால் ஒரு கட்டமைப்பில் ஒன்றாக வேலை செய்வதற்கான இயலுமையையும் கொண்டிருக்க வேண்டும்.

வேலையின்மையினால் பாதிக்கப்பட்டுள்ள இளையோருக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டிய கட்டாயம் தற்போது உருவாகியுள்ளது. இதன்போது நாட்டில் 25சதவீதமாக வறியவர்கள் உள்ளனர் என்பதையும் மறந்துவிட முடியாது.

அந்த நிலையில் இருந்து மக்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான பல்வேறு பொருளாதார திட்டங்கள் உள்ளன. அவற்றை செயல்படுத்தி, கிராமப்புறங்களிலுள்ள வறியவர்களின்எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்.

பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றியுள்ளோம். பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்தோம். அத்துடன், பழைய முறையில் மாகாண சபைகள்செயற்படுத்தவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் முன்மொழிந்துள்ளார். அந்த முன்மொழி குறித்து எனக்கு எந்தஅதிருப்தியும்இல்லை. ஆனால் மாகாண சபைகளிலும் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் உள்ளிட்ட கட்சிகள் கடந்த ஆறு மாதங்களாக ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களை செய்துவருகின்றன. அந்த கட்சிகள் ஒரு வருடமாக அதற்காக பாடுபடுகின்றனர். நாம் உரிய நேரத்தில் பணிகளை ஆரம்பிப்போம். நாங்கள் வெற்றி பெறுவோம் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை என்றார்.

## பத்தமேனி பத்திரகாளி தேர்த் திருவிழா நேற்று



அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் இன்றையதினம் இரதோற்சவம் இடம்பெற்றது.

வசந்த மண்டப பூசையை தொடர்ந்து காலை 11 மணியளவில் அம்பாள் இரதத்தில் எழுந்தருளினார்.

இதன்போதுபெருமளவுபக்தர்கள் பங்கேற்றதுடன்அங்கப்பிரதட்சணம் மற்றும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

ஆலய மஹோற்சவம் கடந்த 11ம் திகதிகொடியேற்றத்துடன்ஆரம்பமாகி நாளை தீர்த்தோற்சவத்துடன் நிறைவுக்கு வரும்.



காலைக்கதிர் Kalaikkathir

# தாந்தாமலையில் அன்னதானம்







கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தாந்தாமலை ஸ்ரீமுருகனாலயத்தின் வருடாந்த மகோற்சவத் திருவிழாவிற்கு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

கிழக்கின் பிரபல சமூக செயற்பாட்டாளர் கலாநிதி கி.ஜெயசிறில் கடந்த ஒருவார காலமாக அங்கு மலையடிவாரத்தில் அன்னதானம் வழங்கிவருகிறார். (05)

# தாந்தாமலையில் கூடும் பல்லாயிரம் அடியார்கள்!

## நாளை காலை தீர்த்தோற்சவம்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தாந்தாமலை ஸ்ரீமுருகனாலயத்தின் வருடாந்த மகோற்சவத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

நாளை திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம் பெறவிருப்பதாக ஆலய பரிபாலன சபை செயலாளர் எஸ்.பரா( அதிபர்) தெரிவித்தார்.

மட்டு.அம்பாறை மாநிலத்தில் மூன்று மலைக்கோவில்கள் உள்ளன. தாந்தாமலை, சங்குமண்கண்டிமலை உகந்தைமலை என்பனவாகும்.

இவை 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டனவாகும்.

கடந்த சில தினங்களாக அங்கு ஆயிரக்கணக்கான அடியார்கள் சென்று வழிபட்டனர்.

மலையில் ஏறி விநாயகனையும் மலையடி வாரத்தில் ஆறுமுகனையும் வழிபட்டு வருகின்றனர்.

நேற்றுவெள்ளிக்கிழமைபூஜையில் மிகவும் அதிகமாக பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பலர் நேர்த்திகளில் ஈடுபட்டனர்.

நீண்ட கடைத்தெரு காணப்படுகிறது. அன்னதானம் வழங்கப்படுகிறது. போக்குவரத்துசேவையும் சீராக இடம்பெறுகிறது.

நாளை மேலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சேருவரென எதிர்பார்க்கப்படுகிறது. (05)

# புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியில் திறன் வகுப்பறையில் கல்விச்செயற்பாடு ஆரம்பம!

1846 ஆம் ஆண்டில் சங்கர ஐயர் கதிர்காம ஐயர் அவர்களால் ஆயக்கடவை சித்தி விநாயகருக்கு முன்பாக தோற்றுவிக்கப்பட்டு 1927 இல் சேர் பொன் இராமநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிஎழுப்பப்பட்ட இப்பாடசாலையில் இவ்வாரம்-யூலை 17ஆம் திகதி திறன்வகுப்பறை செயற்பாடுகள் இப்பாடசாலை சமூகத்தினரின் முன்னிலையில் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இரட்னம் பவுண்டேசன் ஸ்தாபகர் வைத்தியக்கலாநிதி இரட்னம் நித்தியானந்தம் அவர்களின் வழிகாட்டலில் லண்டனைச் சேர்ந்த பாரத கலாலயத்தின் திரு திருமதி ஐங்கரன் அவர்கள் அனைத்துலக மருத்துவ நல அமைப்புடன் இணைந்து திறன் பலகை ஒன்றை வழங்கியதன் மூலம் இப்பாடசாலை ஆசிரியர்- மாணவர்களின் இடைவினை கற்றல் -கற்பித்தல் செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாடசாலையின் அதிபர் சி.சிவகுமார் மற்றும் அழகியல் பாட ஆசிரியர் திருமதி கருணஷரூபினி குணநிதி ஆகியோரின் வேண்டுதலில் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினரின் நேரடிப் பங்களிப்பில் இது நிறைவேறியுள்ளது.

இதன் ஆரம்ப வைபவத்தில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் திரு முத்து இராதாகிருஸ்ணன்,முன்னாள் பணிப்பாளர் கிருஷ்ணகுமார் மற்றும் வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சஞ்சீவன் ஆகியோருடன் இப்பாடசாலையின் கல்விச்சமூகத்தினரும் இணைந்து சிறப்பித்திருந்தார்கள்.

ஆசிரியர்கள் தம் வகுப்பு மாணவர்களை இணைத்து இடைவினையுடனான கற்றல் செயற்பாடுகளை நிகழ்த்தியமை சிறப்பான அம்சம். மற்றும் இவ்வைபவத்தில் அனைவருக்கும் ஆடிக்கூழ் மற்றும் மோதக பலகார வகைகள் பரிமாறப்பட்டமை அனைவரையும் பரவசியப்படுத்தியது. (05)

# வடமாகாண இஸ்லாமிய கலாசார போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கௌரவிப்பு

## வவுனியாவில் நடந்தது




வடமாகாண இஸ்லாமிய காலசார போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வவுனியா, சூடுவெந்தபுலவு அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

வவுனியா, அல் இக்பால் மகாவித்தியாலயத்தின் அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் குறித்த நிகழ்வு வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.

வடமாகாண இஸ்லாமிய கலாசார விழாவானது வியாழக்கிழமை முருங்கன் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது களிகம்புக் கலை கோலாட்டம் போட்டியில் வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலய மாணவர்களான ஆர்.எம்.அர்க்கம், ஏ.எம.சியா, என்.எம்.றிஸ்னி, என்.றிஸ்கான், எப்.எம்.பசால், என்.எம்.முப்தி, ஆர்.எம்.இமாஸ், எம்.எம்.பாசித், எச்.எம்.ஹஸ்னி ஆகிய மாணவர்கள் 2 ஆம் இடத்தையும், கிராத் போட்டியில் அதே பாடசாலை மாணவி ஜே.ஜெனீரா 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது குறித்த மாணவர்கள் வெற்றியாளர் என பட்டி அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இதில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05 - 100)

# அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழு பெயர் பட்டியல் கையளிப்பு

(கே எ ஹமீட்)



சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்களின் பெயர்பட்டியல்களை சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்ட முதுமாணி அல்ஹாஜ். ரவூப் ஹக்கீம் அவர்களிடம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உச்சபீட உறுப்பினரும் அம்பாறை மாவட்ட செயலாளருமான ஏ.சீ. சமால்டீன் இணைந்து நேற்று கையளித்தனர். (05)

# தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்)

*தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.*

*இதன்போது பெருந்தோட்டத் தமிழர்களுக்கும் வடக்கு மற்றும் கிழக்குத் தமிழர்களுக்கும் இடையில் வலுவான நட்புறவை வளர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.*

*இக்கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் ராஜதுரை மற்றும் போசகர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*(05)*

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயகவழியில் மக்கள் தன் பின் திரண்டால் தீர்வை பெற்றுத் தர அமைச்சர் டக்ளஸ் தயாராம்





பிரச்சினைகளுக்கு வன்முறையற்ற ஜனநாயக முறைப்படி தீர்வினை காண மக்கள் அணிதிரளும் பட்சத்தில் தீர்வினை பெற்றுத்தர எப்போதும் தயாராகவே இருக்கின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஈவினை கிராமத்தின் வளர்ச்சி அந்த மக்களின் வாழ்வாதார மேன்பாட்டுக்காக அவர்களின் குரலாக தன்னுடைய பங்களிப்பு எப்போதும் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இளம் விவசாய தொழில் முனைவோர் கிராமமாக ஈவினை கிராமம் தெரிவாகியுள்ள நிலையில் அதன் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இக்கருத்தினை தெரிவித்துள்ளார். மேலும், நிகழ்வில் விவசாய முயற்சியாளர்களுக்கான விவசாய உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

முன்பதாக இளம் விவசாய முயற்சியாண்மை கிராமமாக யாழ் மாவட்டத்தில் ஈவினைக் கிராமம் இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் இளைஞர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் திட்டத்தில் ‘இளம் விவசாய முயற்சியாண்மை கிராமம்’ என்ற திட்டம் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒரு கிராமம் தெரிவுசெய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையில் யாழ். மாவட்டத்தில் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஈவினை கிராமம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைகளின்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன்மொழிவின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட இந்த இளம் விவசாய முயற்சியாண்மை கிராமமான ஈவினை கிராமம் தெரிவாகியிருந்ததன் அடிப்படையில் அதன் அங்குரார்ப்பண நிகழ்வை நேற்று (சனிக்கிழமை) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

முன்பதாக இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமமாக ஈவினை கிராமம் தெரிவாகியுள்ள நிலையில் அதன் அங்குரார்ப்பண நிகழ்வுக்கு சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஈவினை கற்பக விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளிலும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரச அதிபர், வலி தெற்கு பிரதேச செயலர், மாகாண விவசாய பணிப்பாளர், கமநல சேவைகள் பணிப்பாளர், துறைசார் அதிகாரிகள், விவசாய மக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது தமிழ் மக்களுக்குத்தான் நல்லதாம்

## இப்படிக் கூறுகின்றார் சி.வி விக்னேஸ்வரன்

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது முழு நாட்டிற்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கு நன்மையே. இந்த ஜனாதிபதி தேர்தலை பொறுத்த வரைக்கும் வேட்பாளர் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால் அவர்கள் சிறுபான்மையின மக்களின் வாக்குகளை பெற முனைப்பு காட்டுவார்கள்.

அதேநேரம் ஜனாதிபதி தேர்தலில் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறாத நிலைமை ஏற்படும் போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போகும்.

ஏற்கனேவே நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகிறது. அந்நிலையில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாது போனால் நாடும் மிக



மோசமான பொருளாதார பின்னடைவுகளை சந்திக்க நேரிடும். அத்துடன், தேர்தலுக்காக பெருமளவான நிதிகள் செலவழிக்கப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும். அதுவும் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும்.

எனவே, அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு வருட காலத்திற்கு ஜனாதிபதி தேர்தலை பிற்போட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (05)

# பருத்தித்துறையிலிருந்து கடலுக்கு சென்ற நால்வரைக் காணவில்லை

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் இருந்து கடற்தொழிலுக்காக கடலுக்குள் சென்ற 4 கடற்தொழிலாளர்கள் சுமார் 12 நாள்களுக்கு மேலாக கரை திரும்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை, முள்ளியான், கல்முனை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளை சேர்ந்த 04 கடற்தொழிலாளர்களும் கடந்த 07 ஆம் திகதி ஒரு படகில் கடற்தொழிலுக்கு சென்று இருந்தனர். தொழிலுக்கு சென்ற நால்வரும் 05 தினங்களுக்குள் கரை திரும்பி இருக்க வேண்டும். ஆனாலும் அவர்கள் 12 நாள்களாக கரை திரும்பவில்லை என பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடற்தொழிலாளர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பருத்தித்துறை பொலிஸார் கடற்படையினருக்கும் தகவல் வழங்கியுள்ள நிலையில் கடற்படையினரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)


இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களிலிருந்து கடந்த 7 ஆம் திகதி மீன் பிடி தொழிலுக்காகக் கடலுக்குச் சென்ற இரண்டு மீன் பிடி படகுகள் காணாமல் போயுள்ளதாகக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட மீன் பிடி படகில் நான்கு மீனவர்களும் அம்பாந்தோட்டையிலிருந்து புறப்பட்ட மீன் பிடி படகில் இரண்டு மீனவர்களும் இருந்துள்ளனர். இது தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

(05)

# ஊடுகொழுப்பு உணவுகள்.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)



எந்தச் சந்தேகமும் இல்லை. ஆம், நண்பர்களே, உங்களை அடிமைப்படுத்தும் அவ்வளவு வலிமை ஊடுகொழுப்பு உணவுகளுக்கு உண்டு. சந்தேகம் இருந்தால், பெரிய பெரிய அங்காடிகளில் திறந்திருக்கும் துரித உணவுக் கடைகளுக்குச் சென்று பாருங்கள். இந்த உணவுகளின் ருசியில் தேன் உண்ட வண்டாக மயங்கிக் கிடக்கிற பெருங்கூட்டத்தை அங்கே தினம் தினம் காணலாம்.

போதாத குறைக்கு, ஊடகங்களில் வரும் பகட்டான விளம்பரங்களும், போலியான வாக்குறுதிகளும் மேற்கத்திய உணவுகளே சிறந்தவை என்று நம் மூளைக்குள் தொடர்ந்து சலவை செய்துகொண்டே இருக்கின்றன. அத்தோடு, இந்த வகை உணவுகளில் கிளம்பும் மூக்கைத் துளைக்கும் வாசனைகளும், கண்ணைப் பறிக்கும் கவர்ச்சியான நிறங்களும் நம்மை மயக்கிவிடுகின்றன. அப்போதெல்லாம் நம் தாத்தா, பாட்டிக் காலத்து உணவு வகைகளைத் தவிர்த்துவிட்டு, ‘நாகரிக உணவுப் போதை’க்கு அடிமையாகிவிடுகிறோம்.

இந்தப் பாதை தவறு எனப் புரிந்து பராம்பரிய உணவுக்கு மீள்வதுதான் நம் ஆரோக்கியத்துக்கு நல்லது. உங்களுக்கு நீரிழிவு இல்லை இன்சுலின் போட்டுக்கொள்ளவில்லை ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லை குருதிச்சோகை இல்லை உடல் எடை சரியாகத்தான் இருக்கிறது என்றால், மாலை டிபன் சாப்பிட்டே ஆகவேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. நீங்கள் நேரடியாக இரவு உணவுக்குத் தயாராகிவிடலாம்.

### மாலையில் என்ன சிற்றுண்டி சாப்பிடலாம்?

இயலாதவர்கள், மாலை சிற்றுண்டி, எண்ணெய்ப் பலகாரங்களையும் நொறுக்குத் தீனிகளையும் ஓரங்கட்டிவிட்டு, பச்சைக் காய்கறிகளையும், பழங்களையும் கலந்து பழக்கூட்டாகத் தயாரித்து உண்பதை வழக்கப்படுத்திக்கொண்டால், உடல் எடை கூடாது. அப்படியே உடல் பருமன் இருந்தாலும், அது நம்மைவிட்டு ஓடிப்போகும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், காலிஃபிளவர், காளான், கேரட் போன்றவற்றில் தயாரிக்கப்பட்ட உணவுகள் உதவும். ரசாயன உரமிடப்பட்ட காய்கனிகள் வேண்டாம். ஆர்கானிக் காய்கனிகள்தான் நல்லது. இவற்றின் விலை சற்றே கூடுதல்தான். செயற்கை உரங்களில் வளர்ந்த காய்கனிகள் தரும் ஆரோக்கியக் கேடுகளுக்கு நாம் பிற்காலத்தில் செய்யப்போகும் மருத்துவச் செலவுகளோடு ஒப்பிடும்போது, இந்தக் கூடுதல் விலையை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

சிறுதானிய அதிரசம், போளி, குழிப்பணியாரம், தேங்காய் பர்பி, கேழ்வரகுக் கொழுக்கட்டை, கம்பு இனிப்பு மாவு, சிறுதானியப் பண்டங்கள் மிகவும் நல்லது. சுண்டல், பயறு, பாதாம், அவித்த நிலக்கடலை, கொட்டை வகை எதுவானாலும் மாலை சிற்றுண்டிக்கு சிறந்தது.100 கிராம்தான் அளவு. இதனுடன் ஒரு கப் பால் குடிக்கலாம்.

இதற்கு மாற்றாக, ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, நெல்லி, மாதுளை, கொய்யா, அன்னாசி, பப்பாளி, பேரீச்சை, அத்திப்பழம் என ஏதாவது ஒரு பழம் 100 கிராம் எடுத்துக்கொள்ளலாம். அதோடு, எலுமிச்சைச் சாறு குடிக்கலாம். அல்லது ஒரு கப் பால் ஃ தேநீர் சாப்பிட்டால், மாலை சிற்றுண்டிக்குத் தேவையான 200 கலோரிகள் கிடைத்துவிடும்.

அசைவம் விருப்பம் என்றால் கோழி சூப் அல்லது மட்டன் சூப் ஒரு கப் குடிக்கலாம். முட்டையில் தயாரிக்கப்பட்ட எந்த சிற்றுண்டியும் மாலைக்கு நல்லதே. ஒரு முட்டைதான் அளவு. ஐஸ்க்ரீம், செயற்கைக் குளிர்பானங்களைத் தவிர்த்து, இயற்கையாகக் கிடைக்கும் மோர், லஸ்ஸி, இளநீர், பதநீர், பானகம் அருந்தலாம்.

தனியாகச் சாப்பிடுவதைத் தவிர்த்து குடும்பத்துடன் சாப்பிடுங்கள். தொலைக்காட்சி முன்னால் அமர்ந்து சாப்பிடும் பெரும் தவறைச் செய்ய வேண்டாம். தனி டேபிளில் சாப்பிடுவதே நல்லது. அடுத்து, பாக்கெட்டில் நிரம்பியிருக்கும் உணவு அயிட்டத்தை அப்படியே பாக்கெட்டில் வைத்துக்கொண்டு சாப்பிடாதீர்கள் சாப்பிடும் அளவு அதிகமாகி உடல் பருமனுக்குத் துணைபோகும். பதிலாக, பாக்கெட்டில் உள்ளதைத் தேவைக்குத் தட்டில் எடுத்துச் சாப்பிடுங்கள் கலோரிகள் அதிகரிக்காது. உடல் பருமனுக்கு வழி கிடைக்காது. செய்துதான் பாருங்களேன்.

### ஊடுகொழுப்பு உணவுகளை வணிகம் செய்வது ஏன்?

வணிகம் வணிகம்தான். நம் ஆரோக்கியத்தைப் புறக்கணித்து வணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படும் உணவுகள், ஊடுகொழுப்பு உணவுகள். ஆரோக்கியக் கொழுப்புள்ள எண்ணெய்களைவிட ஊடுகொழுப்புள்ள எண்ணெய்களின் விலை மலிவானவை. இவற்றில் தயாரிக்கப்படும் உணவுப்பொருள்கள் சீக்கிரத்தில் கெட்டுப்போவதில்லை.

இவற்றைப் பல மாதங்களுக்குப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளலாம் பாக்கெட்டுகளில் அடைத்து வைத்துக்கொள்ளலாம். நாவுக்கு நல்ல சுவை தரக்கூடிய உணவுகள் இவை. வாடிக்கையாளர்களை இந்த உணவுகளுக்கு அடிமையாக்கி, மீண்டும் மீண்டும் ஈர்த்து, கோடிக்கணக்கில் வணிகத்தைப் பெருக்க உதவும் ‘ஆளுமை’ உணவுகள் இவை.

உடலின் மேல் நமக்கில்லாத அக்கறை வணிகர்களுக்கு இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நம் தவறு. நாம் சாப்பிடும் உணவில் 1மூக்கும் குறைவாகவே ஊடுகொழுப்பு இருக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்துகிறது. அப்படியானால், நாம் எவ்வளவு எச்சரிக்கையுடன் உணவை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நினைத்துப் பாருங்கள். ஆம், நாம்தான் விழித்துக்கொள்ள வேண்டும்!

காலைக்கதிர் Kalaikkathir

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சென்ற மனித உரிமைகள் ஆணைக் குழுவினர்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் தலைமையிலான குழுவினர் அவதானிப்பு விஜயம் ஒன்றை கடந்த 05 ஆம் திகதி மேற்கொண்டிருந்தனர்.

பொதுமக்கள் தமக்கான சேவைகளை பெற்றுகொள்வதில் இடர்பாடுகளை சந்திப்பதாக அலுவலகத்துக்கு கிடைத்த தொலைபேசி முறைப்பாடுகளுக்கு அமைய அக் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

அக்களவிஜயத்தில் எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள்சார் பிரச்சினைகள் தொடர்பில் கடந்த 08 ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பளார், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்று எமது காரியாலயத்தில் இடம்பெற்றது.

அதன் அறிக்கை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக்காரியாலயத்துக்கு எம்மால் அனுப்பிவைக்கப்பட்டது.

அதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக, மத்திய மற்றும் மாகாண சுகாதார சேவை அதிகாரிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமைக்காரியாலத்தில் இடம்பெறவிருக்கும் விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு வருமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கலந்துரையாடலுக்கு பின்வருவோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

01. செயலாளர்- சுகாதார அமைச்சு, கொழும்பு

02.சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்-சுகாதார அமைச்சு, கொழும்பு

03.மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்- வடக்கு மாகாணம்

04.மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்- வடக்கு மாகாணம்

05.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்- யாழ்ப்பாணம்

05.மருத்துவ அத்தியட்சகர்,சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை. (05)

# பரீட்சைக்குச் செல்ல மறுத்தார் மாணவியின் தாய் விபரீத முடிவு

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் நடனபாட செய்முறைப் பரீட்சைக்கு மகள் செல்ல மறுத்ததால் தாயார் தனக்கு தானே தீமூட்டி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் கடந்த 10 ஆம் திகதி இடம பெற்றது.

பற்றிமா வீதி பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய 5 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மகள் நடன பாட செய்முறை பரீட்சைக்கு செல்லாவிட்டால் தான் மண்ணெண்ணெய் ஊற்றி எரிவேன் எனத் தெரிவித்து தனது உடலில் மண்ணெண்ணெய்யை ஊற்றியுள்ளார்.

அதன் பின்னர் தீக்குச்சியை பற்றவைத்த நிலையில் மகளிடம் பேசிக்கொண்டு இருந்தவேளை திடீரென அவரது ஆடையில் தீப்பற்றி எரிய ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் அவர் மீது பரவிய தீ அணைக்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (05)

# கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மத்தியில் நீரிழிவு நோய் அதிகரிப்பு

கடந்த 10 வருட காலப்பகுதியில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் நீரிழிவு நோய் அதிகரித்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நீரிழிவு மற்றும் ஹோர்மோன் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் உதித புலுகஹபிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களில் 20 சதவீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இனிப்பு கலந்த உணவுகளை அதிகம் உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது.

நீரிழிவு நோயிலிருந்து எம்மை காத்துக்கொள்ளத் தினமும் குறைந்தது ஒரு மணி நேரமாவது உடற்பயிற்சியில் ஈடுபடுவது மிகவும் அவசியமாகும்.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இனிப்பு கலந்த உணவுகளைத் தவிர்த்து காய்கறிகள், இறைச்சி மற்றும் மீன்கள் ஆகிய உணவுகளை உண்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# நீரிறைக்கும் இயந்திரத்தை திருடி விற்ற இரு இளைஞர்கள் கைது

மாத்தளை ஹெட்டிப்பொல வனஜீவராசிகள் காரியாலயத்தில் உள்ள கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரத்தை திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் வில்கமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் மகன் உட்பட இரு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என வில்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 21 மற்றும் 26 வயதுடையவர்கள் என்பதுடன் இவர்கள் நீர் இறைக்கும் இயந்திரத்தை திருடி ஹசலக்க பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு தொண்ணூறு ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்த போதே பொலிஸாருக்கு இது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது.

போதைக்கு அடிமையான இந்த இளைஞர்கள் கடந்த காலங்களில் பல திருட்டுக்களை செய்துள்ளதாக பிரதேசவாசிகளிடமிருந்து பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# சிறுவர்கள் மத்தியில் எச்.ஐ.வி. அதிகரிப்பு

*கடந்த 2023 ஆம் ஆண்டில் 40 சிறுவர்கள் எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் வினோ தர்மகுலசிங்க தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,*

*எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 607 ஆகவும் 2023 ஆம் ஆண்டில் 694 ஆகவும் அதிகரித்துள்ளது. பாதிக்கப்பட்ட 694 பேரில் 613 ஆண்கள் உள்ளடங்குகின்றனர்.*

*இந்நிலையில், 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் எச்.ஐ.வி. தொற்று அதிகரித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*(05)*



# கினிகத்தேனையில் தீப்பற்றி எரிந்த கார்

பாணந்துறையிலிருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த கார் ஒன்று கினிகத்தேனை, தியகல பிரதேசத்தில் வைத்து நேற்று (சனிக்கிழமை) காலை திடீரென தீப்பற்றி எரிந்துள்ளதாக கினிகத்ஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்தால் குறித்த பகுதியில் சுமார் ஒரு மணி நேரமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்தின் போது காரில் ஐந்து பயணித்துள்ள நிலையில், தீ பரவலை கட்டுப்படுத்த முயன்ற நபரொருவர் காயமடைந்து கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து காரணமாக கார் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# எரிபொருள் பௌஸர் ஓட்டோ மோதி விபத்து

## நான்கு பேர் காயம்



ஏ9 வீதியில் அநுராதபுரம் இகிரிகொல்லாவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் ஏற்றிச் சென்ற பௌசர் ஒன்று ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது எரிபொருள் ஏற்றிச் சென்ற பௌசர் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த வயலிற்குள் கவிழ்ந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான பௌஸரில் இருந்த எரிபொருளை மற்றுமொரு பௌசருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆய்வு

## திருகோணமலையில் நடந்தது

தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநரின் மாளிகையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பெருந்தோட்டத் தமிழர்களுக்கும் வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கும் இடையில் வலுவான நட்புறவை வளர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் ராஜதுரை மற்றும் போசகர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2024இல் வெளியிடப்பெற்றது